செ.வெ.எண்.626 நாள் 26.07.2010

# பத்திரிகை செய்தி

**தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியத்தின் முதல் கூட்டம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெசவாளர் நல வாரியத்தின் மூன்றாவது கூட்டம்**

**நாள் – 26.07.2010.**

*******

தமிழக அரசு அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடனும் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சட்டம் இயற்றியது. இச்சட்டத்தில் அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை உருவாக்கவும் அவற்றை செயல்படுத்துவதற்கென நல வாரியத்தை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டு 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் கலைஞர்கள், கைவினைத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல்பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், ஓவியர்கள், பொற்கொல்லர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், வீட்டுப்பணியாளர்கள், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு தனித்தனியாக நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டது. 13.07.2009ல் தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியமும் 29.01.2010ல் தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியமும் ஏற்படுத்தப்பட்டு தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியங்களில் பதிவு செய்யும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு உருவாக்கி மிக சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இவ்வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு விபத்து மரண உதவித் தொகையாக ரூ. 1,00,000/– மும் விபத்து ஊனத்திற்கு ஊனத்தின் தன்மைக் கேற்ப உதவித் தொகையும், இயற்கை மரண உதவித் தொகையாக ரூ. 15,000/– மும், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ. 2,000/– மும் கல்வி உதவித் தொகையாக ரூ. 1,000/– முதல் ரூ. 6,000/– வரை, திருமண உதவித் தொகை ரூ. 2,000/– மகப்பேறு உதவித் தொகை ரூ. 6,000/–, மருத்துவ ரீதியாக கருக்கலைப்பு / கருச்சிதைவு ரூ. 3000/–, கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை ரூ. 500/–க்கு மிகாமல் மற்றும் ஓய்வூதியம் ரூ. 400/–பிரதி மாதம் வழங்கப்படுகிறது.

மேற்படி தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் 16 நல வாரியங்களில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம் தவிர பிற வாரியங்களில் மேற்படி நல திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு தேவையான நிதியை வழங்கி வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற 13.5.2006 முதல் 30.06.2010 வரை இந்நல திட்டங்களை செயல்படுத்த ரூ. 172 கோடி தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியங்கள் துவக்கப்பட்ட நாளிலிருந்து 12.05.2006 வரை 7,64,601 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 30.06.2010 வரை 17,86,847 தொழிலாளர்களும் ஆக மொத்தம் வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் 30.06.2010 வரை 25,51,448 தொழிலாளர்கள் பல்வேறு நல வாரியங்களின் கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். 12.05.2006 வரை 64,819 பயனாளிகள் ரூ.13,51,30,944 உதவித்தொகையாக பெற்றுள்ளனர். 13.5.2006 முதல் 30.06.2010 வரை 6,84,865 தொழிலாளர்கள் ரூ. 1,62,50,87,517/– அளவில் உதவித்தொகையாக பெற்றுள்ளனர். ஆக மொத்தம் வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் 30.06.2010 வரை பல்வேறு நல திட்டங்களின் கீழ் 7,49,684 பயனாளிகள் ரூ.1,76,02,18,461/- அளவில் உதவித்தொகையாக பெற்றுள்ளனர்.

(1) தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியத்தில் 30.06.2010 வரை 92,712 தொழிலாளர்கள் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். இதில் 12,452 தொழிலாளர்கள் ரூ. 2,60,01,867/– அளவில் பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

(2) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 13.05.2006 முதல் 30.06.2010 வரை 1,29,678 தொழிலாளர்கள் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். மேற்படி காலத்தில் 83,710 தொழிலாளர்கள் ரூ. 17,89,33,898/– அளவில் நல திட்டங்களின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

இன்று (26.07.2010) நடைபெற்ற தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் முதல் கூட்டம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியங்களுக்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கைத்தறி நலத்துறை அமைச்சர் திரு கே.கே. எஸ்.எஸ். இராமச்சந்திரன், அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அரசு தரப்பு உறுப்பினர்களாக முதன்மை செயலாளர் மற்றும் தொழிலாளர் ஆணையர் ~~திரு ஹன்ஸ்ராஜ் வர்மா,இ.ஆ.ப., கைத்தறி,~~ கைவினை, துணிநூல் மற்றும் கதர்த்துறை, அரசு முதன்மைச் செயலர், அரசு முதன்மைச் செயலர் நிதித்துறை, அரசுச்செயலர் சட்டத்துறை, இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, மற்றும் கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. ப. கருப்புசாமி, தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரிய செயலாளர் திரு அ.ஞானசேகரன், வேலையளிப்போர் பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் விசைத்தறி நெசவாளர் நல வாரியம் மற்றும் கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்யும் நெசவாளர் நல வாரியங்கள் தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்த பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டன.

*************



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9